# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE

REACHING NATIONS

*India's National Spiritual Newspaper*

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXIX YEAR OF OUR LORD JESUS CHRIST, 2024 SEPTEMBER No. 09


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### சங்கீதம் 56:1-10

1. தேவனே, எனக்கு இரங்கும்; மனுஷன் என்னை விழுங்கப்பார்க்கிறான், நாள்தோறும் போர்செய்து, என்னை ஒடுக்குகிறான்.
2. என் சத்துருக்கள் நாள்தோறும் என்னை விழுங்கப்பார்க்கிறார்கள்; உன்னதமானவரே, எனக்கு விரோதமாய் அகங்கரித்துப் போர் செய்கிறவர்கள் அநேகர்.
3. நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்.
4. தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்; தேவனை நம்பியிருக்கிறேன்; நான் பயப்படேன்; மாம்சமானவன் எனக்கு என்ன செய்வான்?
5. நித்தமும் என் வார்த்தைகளைப் புரட்டுகிறார்கள்; எனக்குத் தீங்குசெய்வதே அவர்கள் முழு எண்ணமாயிருக்கிறது.
6. அவர்கள் ஏகமாய்க் கூடி, பதிவிருக்கிறார்கள்; என் பிராணனை வாங்க விரும்பி, என் காலடிகளைத் தொடர்ந்து வருகிறார்கள்.
7. அவர்கள் தங்கள் அக்கிரமத்தினால் தப்புவார்களோ? தேவனே, கோபங்கொண்டு ஜனங்களைக் கீழே தள்ளும்.
8. என் அலைச்சல்களை தேவரீர் எண்ணியிருக்கிறீர்; என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது?
9. நான் உம்மை நோக்கிக் கூப்பிடும் நாளில் என் சத்துருக்கள் பின்னிட்டுத் திரும்புவார்கள்; தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்பதை அறிவேன்.
10. தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்; கர்த்தரை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன்.



## சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்குக் கடந்து வாருங்கள்!

**(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் தலைமைச் சபையில் அளித்த செய்தி)**

**நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்குமுன் வைத்தேன்... ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்துகொண்டு... உன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூர்ந்து, அவர் சத்தத்திற்குச் செவிகொடுத்து, அவரைப் பற்றிக்கொள்வாயாக; அவரே உனக்கு ஜீவனும், தீர்க்காயுசுமானவர்...** உபாகமம் 30:19-20.

மனிதர்களாகிய நாம் எல்லாரும் ஏதாவது ஒரு விதத்தில் வழிதப்பித் திரிந்து ஒவ்வொருவரும் அவரவர் வழியிலேப் போனோம். இது மனுக்குலம் அனைத்திற்கும் ஏற்பட்ட அடிப்படைப் பிரச்சினையாகும். நாம் ஒரு வேளை கொலை, விபச்சாரம், களவு போன்ற பாவங்களைச் செய்யாமல் இருந்திருக்கலாம். ஆனால் நாம் எல்லாரும் ஒன்றுபோல் செய்த பாவம் ஒன்று இருக்கிறது. அதாவது, நாம் எல்லாரும் நம்மை உண்டாக்கிய தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்து அதன் மூலம் நமது சொந்த வழிகளில் சென்று விட்டோம். இதன் மூலம் நாம் தேவனுக்கு நமது புறமுதுகைக் காட்டிவிட்டோம். இதைத் தொகுத்துக் கூறும் எபிரெயச் சொல் அவான் (AVON) என்பதாகும். இது அக்கிரமம் என்று இங்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதை இன்னும் விளக்கமாகச் சொன்னால், முரட்டாட்டம் என்றுக் கூறலாம். இச்செயல் மனிதனுக்கு விரோதமானது அல்ல. ஆனால் தேவனுக்கு விரோதமானது. அக்கிரமமோ, முரட்டாட்டமோ வேறு எந்தச் சொல்லோ AVON என்னும் வார்த்தையின் முழு அர்த்தத்தைக் கொடாது. ஆனால் வேதத்தில் சொல்லப்பட்டுள்ள AVON என்ற சொல் அக்கிரமத்தை மாத்திரமல்ல, அக்கிரமத்தால் வரக்கூடிய தண்டனைகளையும், விளைவுகளையும் குறிக்கிறது.

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி!



கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன்

நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 2.00 மணியில் இருந்து

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

* பதிவு செய்யுங்கள் - பிறருக்கும் பகிருங்கள் *

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)



## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



**நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது. - சங்கீதம் 136:23**


**OUR MISSION POLICY**

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

**HON. EDITOR-IN-CHIEF**
Rev. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.

**HON. MANAGING EDITOR**
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**GENERAL MANAGER**
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM, MBA.

**ADMINISTRATION**
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)

**EDITORIAL BOARD**
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Rev. Dr. K.R. Rajasekaran

**EDITOR, PUBLISHER & PRINTER**


Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858 95661 31858

**E.MAIL**
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

**YOUTUBE CHANNEL**
Echo of His Call


கிறிஸ்துவுக்குள் அன்புள்ள சகோதர சகோதரிகளுக்கு,

நமது கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறோம். உங்களுக்காக ஊக்கமாக ஜெபிக்கிறோம். கடந்த மாதம் நடைபெற்ற நமது அனைத்து ஊழியங்களையும், குறிப்பாக ஆகஸ்ட் மாதம் 9–ஆம் தேதி முதல் 11–ஆம் தேதி வரை நடைபெற்ற நமது 56–ஆம் ஆண்டு கன்வென்ஷனை தேவன் அபரிமிதமாக ஆசீர்வதித்தார். தேவ நாமம் மகிமைப்பட்டது.



**திருமதி ஜெனோவா இளங்கோவன்**

நமது தலைமைச் சபையின் உடன் ஊழியரும், போதகர் E. கமல் சாம்சன் அவர்களது தாயாருமான திருமதி ஜெனோவா இளங்கோவன் அவர்கள் ஜுலை மாதம் 29–ஆம் நாளன்று மகிமைக்குள் பிரவேசித்தார்கள். நமது தலைமைச் சபையில் மிகுந்த அர்ப்பணிப்புடனும், கடினமாகவும் ஊழியத்தில் பிரயாசப்பட்ட சகோதரி அவர்களின் குடும்ப ஆறுதலுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

கேரள மாநிலத்தில் அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளம் மற்றும் நிலச்சரிவினால் ஏற்பட்ட உயிரிழப்புகள் நம்மைப் பெருந்துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. மக்கள் பலர் தங்களது குடும்பத்தினரையும், பிரியமானவர்களையும், வீடுகளையும், உடைமைகளையும் இழந்துள்ளனர். இம்மக்களது மறுவாழ்வுக்கு ஜெபிக்கவும், தங்களது உதவிக்கரங்களை நீட்டும்படியும் கேட்டுக் கொள்கிறோம்.

நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவரான தோமா இந்தியாவில் கி.பி. 52–ஆம் ஆண்டு முதலில் தனது காலடி பதித்த மாநிலம் கேரளமாகும்; இங்குதான் நமது மலையாளப் பத்திரிகையின் ஆசிரியர் E. பெஞ்சமின் மோசஸ், உதவி



**E. பெஞ்சமின் மோசஸ்**



**சகோ. மோகன்குமார்**



**சகோதரி சாஜினி செரியன்**

ஆசிரியர் சகோ. மோகன்குமார், ஆங்கில ஆசிரியர் சகோதரி சாஜினி செரியன் ஆகியோர் வசிக்கின்றனர். யாவரும் நலமுடன் இருக்கின்றனர். மேலும் தோமா இரத்த சாட்சியாய் மரித்த சென்னையில் நமது **அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்** நிறுவப்பட்டுள்ளது.

நீங்கள் ஏற்கனவே அறிந்துள்ளபடி **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களில் **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசனம் (Global Vision for Youth and Kid Care)** என்ற சிறப்புப் பிரிவு ஊழியத்தைத் துவங்கியுள்ளோம்; நாள்தோறும் சரியாக இரவு 10.00 மணிக்கு உலகெங்குமுள்ள **அழைப்பின் எதிரொலி** ஊழிய அங்கத்தினர்கள் உலகமெங்குமுள்ள குழந்தைகளுக்காகவும், இளம் பெண்களுக்காகவும், இளம் ஆண்களுக்காகவும் இணைந்து ஜெபிக்கின்றனர்; இது ஒரு மிகச் சிறிய ஜெபம்தான். ஆனால் மிகுந்த வல்லமையுடையதாய்க்


**Our Ministries:** ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) BIBLECOR - Postal Courses (3 languages) YouTube Ministry Online Courses Theological Correspondence Courses (2 languages) Church Planting Nehemiah Bible Colleges Gospel Printing Press Great Commission Partners St. Paul's Matriculation School Crusades Community Development

காணப்படுகிறது; **"எங்கள் தேவனாகிய கர்த்தாவே பூமியின் மீதெங்குமுள்ள குழந்தைகளையும், இளம் பெண்களையும், இளம் ஆண்களையும் நினைத்தருளும், ஆமென்!"** இதுவே அந்த ஜெபம். நீங்கள் எங்கிருந்தாலும் தினமும் இரவு 10.00 மணிக்கு இந்த ஜெபத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறோம்.

இந்த ஊழியத்தின் பலனாக, நமது தலைமைச் சபையிலுள்ள வாலிபர் மத்தியிலும் **செயின்ட் பால் மெட்ரிகுலேஷன் பள்ளியில்** பயிலும்



**தலைமைச் சபை – கருத்தரங்கு**

வாலிபர் மத்தியிலும் ஏற்பட்டுள்ள எழுப்புதல் கவனிக்கத்தக்கதாக உள்ளது. உலகெங்குமுள்ள நமது நண்பர்களிடமிருந்து தொடர்ந்து எண்ணற்ற சாட்சிகள் வந்த வண்ணமுள்ளன. இந்த வாலிபர்களுக்கென ஆகஸ்ட் 11–ஆம் தேதி நமது தலைமைச் சபையில் ஒரு கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அதுவும் ஆசீர்வதிக்கப்பட்டது. கர்த்தருக்கு மகிமையுண்டாவதாக!

**அழைப்பின் எதிரொலியின்** பல்வேறு ஊழியங்களில் ஈடுபட்டுள்ள குடும்பங்கள் சரீர பலவீனங்களினாலும், பொருளாதார நெருக்கடியிலும் சிரமங்களுக்குள்ளாகி சாத்தானின் தாக்குதலுக்கு உள்ளாகின்றன; இதுபோன்ற சவால்களை நாம் சந்திக்க நேர்ந்தாலும், மிகுந்த அர்ப்பணிப்புடனும், ஆவலுடனும் நமது பரம அழைப்பை நோக்கி முன்னேறுகிறோம். ஆகையால் தினமும் இரவு 10.00 மணி ஜெபத்தில் **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் தலைவர்கள் மற்றும் ஊழியர்களின் நலனுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்,

சபை பாகுபாடின்றி உலகளாவிய திருச்சபைகளில் எழுப்புதல் ஏற்பட ஜெபித்துப் பிரயாசப்படுவதே நமது கடமையாகும்.

உங்கள் அனைவரையும் மிகவும் நேசித்து உங்களுடன் நெருங்கிய ஐக்கியங்கொள்ள வாஞ்சிக்கிறோம்.

**அழைப்பின் எதிரொலியின்** அனுதின 5 நிமிட யூடியூப் செய்திகளை தமிழ், ஆங்கிலம், இந்தி, தெலுங்கு ஆகிய மொழிகளில் கண்டு பயனடையுங்கள். எங்களுடன் அலைபேசியுடனும் தொடர்பு கொள்ளுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! அன்புடனும், நன்றியுடனும்

**கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,**

**போதகர் அலக்ஸ் சாம்சன் சாம்**
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**

(+91) 98410 71858 / 98412 71858,
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

## உங்கள் கவனத்திற்கு!

*நமது **அழைப்பின் எதிரொலி ஊழியத்தின்** 5 நிமிட தேவ செய்திகளும், ஜெபங்களும் தினமும் காலை 2.00 மணி முதல் தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் Echo of His Call YouTube சானலில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. இதைப் பார்ப்பதன் மூலம் கர்த்தரின் கிருபையைப் பெறலாம்.*

*மேலும், (+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய என்னுடைய தனிப்பட்ட (Personal) இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

**– போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**

... 1–ம் பக்கத் தொடர்ச்சி

உதாரணமாக, ஆதியாகமம் 4:13–ல் தன் சகோதரனைக் கொன்றதற்குக் காயீனுக்கு தேவன் நியாயத்தீர்ப்பு வழங்கியபோது, ... **காயீன், கர்த்தரை நோக்கி: எனக்கு இட்ட தண்டனையை என்னால் சகிக்க முடியாது** என்றான். இங்கே தண்டனை என்னுமிடத்தில் பயன்படுத்தப் பட்டுள்ள சொல் AVON என்பதாகும். இது காயீனுடைய அக்கிரமத்தை மாத்திரமல்ல, அதற்குரிய தண்டனையையும் உள்ளடக்கியுள்ளது.

புலம்பல் 4 –ம் அதிகாரம் 6 மற்றும் 13–ம் வசனங்களில் இருமுறை இந்த வார்த்தை இதே அர்த்தத்தில் பயன்படுத்தப் பட்டிருப்பதைப் பார்க்கலாம். **கைச்செய்கை இல்லாமல் ஒரு நிமிஷத்திலே கவிழ்க்கப்பட்ட சோதோமின் பாவத்துக்கு வந்த தண்டனையைப்பார்க்கிலும் என் ஜனமாகிய குமாரத்தியின் அக்கிரமத்துக்கு வந்த தண்டனை பெரிதாயிருக்கிறது.** புலம்பல் 4:6

**அதின் நடுவில் நீதிமான்களின் இரத்தத்தைச் சிந்தின அதின் தீர்க்கதரிசிகளின் பாவங்களினாலும், அதின் ஆசாரியர்களின் அக்கிரமங்களினாலும் இப்படி வந்தது.** புலம்பல் 4:13

சமீப காலங்களில் பலருடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் குடும்ப வாழ்க்கையிலும் இதைப் பார்க்க முடிகிறது. தொடர்ந்து சண்டைகளும், குழப்பங்களும் நிலவி வருவதையும் பார்க்க முடிகிறது.

உபாகமம் 28 : 20, 21, 22, 27, 28. வசனங்களில் தேவன் கூறுகிறதாவது:

**என்னைவிட்டு விலகி நீ செய்து வருகிற உன் துர்க்கிரியைகளினிமித்தம் சீக்கிரத்தில் கெட்டுப்போய் அழியுமட்டும், நீ கையிட்டுச் செய்கிறதெல்லாவற்றிலும் கர்த்தர் உனக்குச் சாபத்தையும் சஞ்சலத்தையும் கேட்டையும் வரப்பண்ணுவார்.**

**நீ சுதந்தரிக்கும் தேசத்தில் கர்த்தர் உன்னை நிர்மூலமாக்குமட்டும் கொள்ளைநோய் உன்னைப் பிடித்துக் கொள்ளப் பண்ணுவார்.**

**கர்த்தர் உன்னை ஈளையினாலும், காய்ச்சலினாலும், உஷ்ணத்தினாலும், எரிபந்தத்தினாலும், வறட்சியினாலும், கருக்காயினாலும், விஷப்பனியினாலும், வாதிப்பார்; நீ அழியுமட்டும் இவைகள் உன்னைப் பின் தொடரும்.**

**நீ குணமாகாதபடி கர்த்தர் உன்னை எகிப்தின் எரிபந்தமான பருக்களினாலும், மூலவியாதியினாலும், சொறியினாலும், சிரங்கினாலும் வாதிப்பார்".**

**கர்த்தர் உன்னைப் புத்திமயக்கத்தினாலும், குருட்டாட்டத்தினாலும், மனத் திகைப்பினாலும் வாதிப்பார்.**

## I. சாபத்தின் அறிகுறிகள்!

### 1. மனச் சோர்பு!

சிலர் தங்கள் வாழ்க்கையில் நடந்துவிட்ட சில தோல்விகளாலும், பிரச்சினைகளாலும் மனச்சோர்வடைந்து எந்தக் காரியத்தையும் செய்யமுடியாமல் போய் விடுகிறார்கள். இதற்கு மாற்றுப் பரிகாரம் காணாவிட்டால், இது சிலவேளைகளில் நிரந்தர மனத்தளர்ச்சியையும் (Depression), மேற்கொண்டு எதையும் செய்ய முடியாத நிலையையும் (failure) உருவாக்கலாம். இன்னும் சிலர் நடக்காத காரியங்களையும், ஊர்ஜிதமாக்கப்படாத சில தவறான தகவல்களையும் மனதிற்குள் கொண்டு வந்து அவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து ஒரு நிழலுடன் போராடும் தன்மைக்குப் போய்விடுகிறார்கள்.

### 2. சோம்பல் அல்லது சோம்பேறித்தனம்!

எல்லா வசதிகள் இருந்தும், சூழ்நிலைகள் எல்லாம் சாதகமாயிருந்தும், செய்லபடமுடியாமல் இருத்தல். காரணம்

கேட்டால் யார் மேலேயாவது அல்லது தனது வாழ்க்கையின் சாதகமற்ற பிற பகுதிகளைக் காரணம் காட்டி, ஆகமொத்தத்தில் தங்கள் ஒவ்வொரு வாழ்நாளையும் வீணடித்தல்.

### 3. பரம்பரை விசித்திர வியாதிகள்!

சிலருடைய குடும்பச் சரித்திரத்தைத் திரும்பிப் பார்த்தால் ஒரே விசித்திர வியாதி அல்லது ஒரே விதமான பிரச்சினை குடும்ப அங்கத்தினர்களைத் தாக்கியிருப்பதைப் பார்க்கலாம்.

### 4. தொடர் கருச்சிதைவும், மலட்டுத் தன்மையும்!

ஒரே இடத்தில் இரண்டு நிலங்கள் இருக்கும். ஒரே விதத்தில்தான் இரண்டையும் பண்படுத்துவார்கள், எருவிடுவார்கள். தண்ணீர்ப்பாய்ச்சுவார்கள். ஆனால் ஒன்று சிறந்த பலனைத்தரும். ஆனால் பக்கத்திலிருக்கும் நிலம் தொடர்ந்து பலன் தராமலும், பாதுகாப்பற்றதுமாக இருக்கும். இதுபோல சரீரம் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் காரணமின்றி, தொடர் கருச்சிதைவுகளும், குழந்தைகள் பிறவாமலும், ஒருவேளைப் பிள்ளைகள் பிறந்தாலும் பிறக்கிற பிள்ளைகள் பல்வேறு பெலவீனங்கள் உள்ளவைகளாகவும் பிறக்கின்றன.

### 5. திருமணத் தாமதங்களும், திருமண முறிவுகளும்!

பல முயற்சிகளும் பயன் அளிக்காமல்போய் முடிவில் திருமணங்கள் நடப்பதில் தடைகள் பெருகிக்கொண்டேப் போகும். அதுமாத்திரமல்ல, திருமண வாழ்வில் ஏற்படும் மனஸ்தாபங்களை ஏற்றுக்கொள்ளவும், விட்டுக் கொடுக்கவும் முடியாமல், விவாகரத்தையும், கணவன் மனைவி பிரிந்து வாழ்வதையும் விரும்பும் மனநிலை உண்டாகும். கணவன் மனைவி தம்முள் விட்டுக்கொடுத்து வாழ்வதைவிட இப்பேர்ப்பட்ட மக்களை முதலீடாக வைத்து பணம் சம்பாதித்து, தங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளும் வழக்கறிஞர்களிடமும், வழக்குரைஞர்களிடமும், நீதிபதிகளிடமும் தங்கள் சொந்த வாழ்க்கையின் இரகசியங்களை, கூச்சமின்றியும், அச்சமின்றியும் விட்டுக்கொடுத்துப் பேசும் அசுத்தமான துணிச்சலை மக்கள் பெற்றிருப்பதை நாம் பார்க்க முடிகிறது.

### 6. தொடர்ந்த தரித்திரமும், தோல்விகளும்!

கடின உழைப்பின் மத்தியிலும் தரித்திரமும், தோல்விகளும் தொடர்ந்து வாழ்க்கையில் தாக்கங்களை உண்டாக்கி அதன்மூலம் வாழ்க்கை அர்த்தமற்றதாக மாறிவிடுவதை நாம் பார்க்க முடிகிறது. இதனால் சிலர் தங்கள் வாழ்க்கையை வெறுக்கவும், தற்கொலையின் மூலம் அதனைத் தீர்த்துக் கட்டவும் முன்வந்து விடுகின்றனர். இன்னும் சிலருடைய வாழ்க்கையில் தொடர்ந்து விபத்துக்கள் நடப்பதை நாம் பார்க்கிறோம்.

## II. சாபம் எப்படி மனுக் குலத்துக்குள் பிரவேசித்தது?

காரணம் இல்லாமல் சாபம் வராது. **...காரணமில்லாமலிட்ட சாபம் தங்காது.** நீதிமொழிகள் 26:2

### 1. தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியத் தவறும்போது மனுக்குலத்தை சாபம் ஆட்கொள்ளுகிறது!

**முதலாவது இந்த சாபம் உலகம் உண்டாக்கப்பட்டபோது ஏதேன் தோட்டத்திலேயே மனுக்குலத்தின்மேல் புகுந்துவிட்டது. நம் ஆதிப் பெற்றோராகிய ஆதாம், ஏவாள் ஆகியோரை ஆண்டவர் வெகுவாய் ஆசீர்வதித்து, ஏதேன் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனிகளையும் புசிக்கலாம் என்றும், ஒரே ஒரு விருட்சத்தின் கனியை மட்டும் புசிக்கக்கூடாது என்றும் கட்டளையிட்டார். ஆனால் அவர்களோ தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமற் போய் அவரால் தடை செய்யப்பட்ட விருட்சத்தின் கனியை சாத்தானின் ஆலோசனைக்குக் கீழ்ப்படிந்து புசித்துவிட்டார்கள். இக்கீழ்ப்படியாமையை வெறுத்த தேவன் அவர்களைச் சபித்தார்.** (ஆதியாகமம் 2 –ம் அதிகாரம் 15 முதல் 3 –ம் அதிகாரம் 1 முதல் 24 வசனங்கள் வரை)

இப்போதும் உலக மக்களைப் பார்த்து இயேசு கிறிஸ்துவே ஆண்டவர் என்றும், அவர் சரித்திரசான்றின்படி உலகத்தில் பிறந்து, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்த ஆண்டவர் என்றும், அவர் உங்கள் பாவங்களை மன்னிப்பார் என்றும், அவரை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, அதன் மூலம் தேவபிள்ளைகளாக மாறுங்கள் என்றும், முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது உலக ஆசீர்வாதங்கள் உங்களைத் தேடி வரும் என்றும், பரிசுத்தமாய் வாழுங்கள் என்றும், அநீதி செய்யாதீர்கள் என்றும் பல்வேறு ஊடகங்கள் மூலம் கற்பிக்கிறோம், பிரசங்கிக்கிறோம். இந்த தேவ செய்தியைக் கேட்பவர்கள் பல்லாயிரங் கோடிகள். ஆனால் அவற்றிற்குக் கீழ்ப்படிந்து, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, உண்மையாய் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்படுகிறவர்கள் எத்தனைபேர்?

இதேப்போல, கிறிஸ்தவர்களைப் பார்த்து, இயேசு கிறிஸ்துவைப்போல மாறுங்கள் என்றும், அவரை மாதிரியாகப் பின்பற்றுங்கள் என்றும், அவருக்கு ஊழியம் செய்யுங்கள் என்றும் கட்டளைகளாகப் போதிக்கிறோம். கேட்கிறீர்கள், ஆனால் பின்பற்றத் தயக்கம் காட்டுகிறீர்கள். தேவாலயம் பரிசுத்தமாய்ப் பாதுகாக்கப்பட வேண்டும். தேவாலயத்தில் பிரவேசிக்கும் போது நூற்றுக்கு நூறு தேவனை ஆராதிக்கிற மன நிலையுடன் மட்டுமே வரவேண்டும். தவறான எண்ணங்களுடனும், கெட்ட எதிர்பார்ப்புகளுடனும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கக்கூடாது. உங்கள் செல்போன்களை சுவிட்ச் ஆப் பண்ணிவிட்டு, ஆலயத்

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....


# நெகேமியா மாலை நேர வேதாகமக் கல்லூரி

**சேப்பாக்கம் & சந்தோஷபுரம், சென்னை**

ECHO OF HIS CALL 1969-2019 50 GOLDEN JUBILEE REACHING NATIONS

போதனா மொழி : **தமிழ்**

**உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 55 வருட அனுபவ ஸ்தாபனம்.**

**Diploma in Theology**

**கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**
**உடனே அணுகவும் !**

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
**மின்னஞ்சல் :** sam@echoofhiscall.org /**இணையதளம் :** www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS



**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2024 செப்டம்பர் 19 முதல் அக்டோபர் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்திலுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

**செப்டம்பர் 19** ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை நமது சுவிசேஷ அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு அனைத்து பணித்தளங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறதற்காக ...

**செப்டம்பர் 20** ⇨ **அழைப்பின் எதிரொலி** ஊடக ஊழியத்தின் 5 நிமிட யூடியூப் செய்தியின் மூலம் எழும்பி வரும் சாட்சிகளால் எங்களை ஆசீர்வதித்த கிருபைக்காக ...

**செப்டம்பர் 21** ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக் கல்லூரி** மற்றும் **அஞ்சல்வழிக் கல்விமுறைகளைக்** கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

**செப்டம்பர் 22** ⇨ அர்ப்பணிப்புடன் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைக்கு ஆதரவளித்து வரும் இணை ஆசிரியர்கள் கொண்ட நமது ஊழியத்தை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

**செப்டம்பர் 23** ⇨ நமது தலைமைச்சபை மற்றும் கிளைச்சபையின் ஞாயிறு ஆராதனைகளில் வழங்கப்படும் தேவச்செய்திகளின் வல்லமைக்காக ...

**செப்டம்பர் 24** ⇨ நமது சுவிசேஷத்தின் அச்சகத்தின் தங்குதடையற்ற இயக்கத்திற்காகவும் அதற்கு காரணமாயிருக்கும் திறமையான ஊழியர்களுக்காகவும்...

**செப்டம்பர் 25** ⇨ **அழைப்பின் எதிரொலி** ஊழியங்கள் 56வது ஆண்டில் அடியெடுத்து வைத்ததை ஆசீர்வதித்த கிருபைக்காக....

**செப்டம்பர் 26** ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக...

**செப்டம்பர் 27** ⇨ நமது **அஞ்சல்வழி இறையியல் கல்வி** மற்றும் **தொலைதொடர்பு வேதாகமக்கல்வி** முறைகளின் வளர்ச்சிகளுக்காக ...

**செப்டம்பர் 28** ⇨ நமது தலைமைப் போதகரை முழு அர்ப்பணிப்புடன், பன்மொழி ஊழியங்களின் மூலமாக சுவிசேஷத்தினை பிரசங்கித்திட கிருபை பாராட்டி வருகிறதற்காக...

**செப்டம்பர் 29** ⇨ **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களின் பணியாளர்களை மற்றும் அவர்கள் குடும்பத்தினரைக் காத்து வருகிற கிருபைக்காக...

**செப்டம்பர் 30** ⇨ எழுப்புதலுக்குரிய புதிய விசுவாசிகளை ஆசீர்வதித்ததற்காக....

**அக்டோபர் 01** ⇨ அர்ப்பணிப்புடன் கூடிய உழைப்பை நல்கும் களப்பணியாளர்களை ஆசீர்வதித்து வருவதற்காக...

**அக்டோபர் 02** ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வராஜ் அவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தாருக்கு உடல்நலம் மற்றும் தேவபாதுகாப்பு அளித்து வருகிற கிருபைக்காக...

**அக்டோபர் 03** ⇨ நடப்பு கல்வியாண்டில் **நமது நெகேமியா வேதாகமக்கல்லூரிகளில்** தொடங்கவிருக்கும் 2வது செமஸ்டரை ஆசீர்வதித்த கிருபைக்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

**அக்டோபர் 04** ⇨ மது அருந்தும் பழக்கம் உடையோர் மற்றும் தீயபழக்கம் கொண்டோர் மனந்திரும்ப...

**அக்டோபர் 05** ⇨ உலகெங்குமுள்ள அனைத்துப் பெண்களும், சிறுவர் சிறுமியரும் பாதுகாப்பாக வாழ்ந்திட வேண்டி...

**அக்டோபர் 06** ⇨ **அழைப்பின் எதிரொலியின்** வாலிப மற்றும் கள ஊழியங்களுக்காக...

**அக்டோபர் 07** ⇨ நமது தலைமைப்போதகர் மற்றும் குடும்பத்தினரின் நல்ல ஆரோக்கியத்திற்காக...

**அக்டோபர் 08** ⇨ சுவிசேஷம் சென்றடையாத இந்திய நாட்டின் பகுதிகள் அனைத்திற்கும் சுவிசேஷத்தைக் கொண்டு சென்றிட நமக்கு வாய்ப்பளிக்க வேண்டி...

**அக்டோபர் 09** ⇨ நமது சிங்கள பத்திரிகைக் குழுவின் அங்கத்தினரான சகோதரி மஞ்சுளா அவர்களும் விரைவில் பரிபூரண சுகம் பெற வேண்டி ...

**அக்டோபர் 10** ⇨ ஆண்டவரது இராஜ்யம் பூமியில் நிலைப்பட மேலும் கூடுதலான தரிசனங்களை நம்மிடத்தில் அருளவேண்டி...

**அக்டோபர் 11** ⇨ சமீபத்தில் தென்னிந்தியா மாநிலமான கேரளத்தில் உள்ள வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவு பாதிப்புகளிலிருந்து மக்கள் மீண்டு இயல்பு நிலைக்கு திரும்ப வேண்டி...

**அக்டோபர் 12** ⇨ நமது பங்காளர்கள், மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்களுக்காக...

**அக்டோபர் 13** ⇨ உலக தேசங்களின் ஒற்றுமை மற்றும் சமாதானத்திற்காக...

**அக்டோபர் 14** ⇨ நம்முடைய சுவிசேஷ அச்சகத்திற்காக...

**அக்டோபர் 15** ⇨ நமது ஊழிய விரிவாக்கம் மற்றும் உலகளாவிய சுவிசேஷ பிரபல்யத்திற்காகவும் ...

**அக்டோபர் 16** ⇨ உலகில் பல்வேறு பகுதிகளில் நிலவும் பொருளாதார மந்தநிலை முடிவுக்கு வர வேண்டி...

**அக்டோபர் 17** ⇨ ஒடுக்கப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதாரநிலை மேம்பட வேண்டி...

**அக்டோபர் 18** ⇨ அனைத்து நாடுகளுக்கும் தேவபயமுள்ள தலைவர்களை தந்து ஆசீர்வதிக்க வேண்டி...

... 4–ம் பக்கத் தொடர்ச்சி

திற்குள் நீங்கள் இருக்கும்வரை அதன் மூலம் எந்த தகவல் பரிமாற்றங்களும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ வைத்துக் கொள்ளக் கூடாது. ஒழுங்காக ஆடைகளை அணிந்துவர வேண்டும். அவலட்சண உடைகளைத் தவிர்க்க வேண்டும். தவறான உறவுகளை மேம்படுத்தும் வழிகளைக் கையாளும் விதத்தில் நடந்துகொள்ளக் கூடாது. ஆண்கள் பெண்களைப் போல தலைமுடியை வளர்க்கக்கூடாது. பெண்கள் ஆண்களை போல தலைமுடியை வெட்டக் கூடாது. ஆலய ஆராதனைகளுக்குத் தாமதமாக வந்துவிட்டு சீக்கிரமாக ஆலயத்தை விட்டு ஓடும் பழக்கம் கூடாது. ஆலய ஆராதனைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இவற்றில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

இப்படியெல்லாம், தேவ கட்டளைகளைப் பிரசங்கிக்கும்போது ஏற்றுக்கொள்ள மனமில்லாமல், “**எப்படியும் நடந்து கொள்ளுங்கள் என்றும் உங்களை நாங்கள் தட்டிக்கேட்கவே மாட்டோம்**” என்றும் சொல்லும் சபைகளுக்கும், கூட்டத்தின் மிகுதியால் போதகர்களுடைய கண்களில் சிக்காமல் இருக்கக்கூடிய சபைகளுக்கும் சென்று தங்கள் இஷ்டம் போல வாழ்வதை இக்காலக் கிறிஸ்தவர்கள் அதிகம் நாடித் தேடுகின்றனர். இப்படி வாழ்ந்தால் தேவ கோபம் பற்றி எரியாமல் என்ன செய்யும்? இதனால்தான் இக்காலக் கிறிஸ்தவ உலகில் ஆதி அப்போஸ்தலர்கால ஆவிக்குரிய அனுபவங்களும், அற்புதங்களும், அடையாளங்களும் மங்கி மறைந்துப் போய் தேவ ஊழியர்கள் என்று அழைக்கப்படும் பலர் தரிசனம் அற்றவர்களாகவும், விசுவாசிகள் பலர் இரட்சிக்கப்படாதவர்களுமாகி ஆவிக்குரிய பெலவீனர்களாகிவிட்டனர். இது சாபத்தின் விளைவு.

## 2. தனக்குத் தானே இட்ட சாபம் பொல்லாதது!

**நீ... உன் வாயின் வார்த்தைகளால் பிடிபட்டாய்.** நீதிமொழிகள் 6:2. இதன் அர்த்தம் “**நீ உன் வாயினால் சொல்லும் வார்த்தைகள் உன்னை பாதிக்கும் அல்லது கட்டுப்படுத்தும்**” என்பதாகும். சிலர் தங்களைப் பார்த்தே, “நான் ஏன் பிறந்தேன்?” என்றும், “**நான் அதிக நாட்கள் வாழ விரும்பவில்லை**” என்றும், பிறரைப்பார்த்து, “**நான் தற்கொலை செய்துகொள்வேன்**” என்றும் சொல்லுவது வழக்கம். இது தவறு. இப்படி “**நான் தற்கொலை பண்ணிக் கொள்வேன்**” என்று வேடிக்கைக்காகவும், பிறரை பயமுறுத்துவதற்காகவும் தங்கள் வாயினால் சொன்ன பலர் தற்கொலை மூலம் மரித்திருக்கிறார்கள்.

சிலர் வீடுகளில் உணவு அருந்தும்போது, உணவை சமைத்த மனைவியைப்பார்த்து, “**சாப்பாடு நன்றாகவே இல்லை. இப்படி உன் சாப்பாட்டைச் சாப்பிட்டால் நான் சீக்கிரம் செத்துப் போவேன்**” என்று சொல்லுவார்கள். இதைத் தங்கள் வாயினால் சொல்லுகிறது அவர்களுக்குத் தாங்களே மரண சாசனம் எழுதுவதற்கு ஒத்தாகும். இதுபோல் தங்கள் பிள்ளைகளை பக்கத்து வீட்டுப் பிள்ளைகளுக்கு ஒப்பிட்டு, “**பார் பக்கத்து வீட்டுப் பையனைப் பார்! அவன் எப்படி அழகாகவும், மிடுக்காகவும், சுறுசுறுப்பாகவும் இருக்கிறான். உன் முகம் அருவருப்பாயிருக்கிறது. உன்னை நான் ஏன் பெற்றேனோ?**” இப்படியெல்லாம் சொல்லுவது சாபத்தை நாம் நம் வார்த்தைகளால் விலைகொடுத்து வாங்குவதற்கு சமமாகும்.

அப்போஸ்தலனாகிய பேதுருவின் வாழ்க்கையில்கூட ஒரு சம்பவம் நடந்தது. மாற்கு 14–ம் அதிகாரம் வசனங்கள் 66 முதல் 72 வரைப் படித்துப் பாருங்கள். **பிரதான ஆசாரியனின் முற்றத்தில் இருக்கும்போது, தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சீடன் இல்லை என்று மூன்று முறை மறுதலித்தான். மூன்றாம் முறை மறுதலிக்கும்போது அவன் தனது எஜமானரும், ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவை சபிக்கவும், சத்தியம் பண்ணவும் தொடங்கினான்.** வசனம் 71. இப்படி சத்தியம் பண்ணியதின் மூலம் தனக்கு ஒரு பெரிய சாபத்தை வரவழைத்துக் கொண்டான்.

இதைக் குறித்து அவன் மனம் கசந்தபோதிலும், தன் சொந்த வார்த்தைகளினால் உண்டான சாபத்தின் விளைவை அவன் அப்போது உணர்ந்திருக்க வாய்ப்பு இல்லை என்று நான் கருதுகிறேன். ஆனால் மூன்று நாட்களுக்குப் பின்பு காலியானக் கல்லறைக்கு வந்த ஸ்திரீகளைத் தேவதூதர்கள் பார்த்து, **நீங்கள் அவருடைய சீஷரிடத்திற்கும், பேதுருவினிடத்திற்கும் போய்: உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார் ... என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்** என்றனர். மாற்கு 16:7, இங்கு பாருங்கள், இந்த இடத்தில் பேதுரு சீஷர்களுக்குள் ஒருவனாகக் கருதப்படவில்லை. அவன் தன் சொந்த வார்த்தையாலேயே இயேசு கிறிஸ்துவின் சீஷனாக இருக்கும் தகுதியை இழந்துவிட்டான்.

அதனால்தான் இயேசு கிறிஸ்து தமது மேலான கிருபையின் இரக்கத்தினால் கலிலேயாக் கடல் அருகில் சென்று மறுபடியும் பேதுருவைச் சந்தித்து சீஷனாக மாறும்படி செய்தார். அவன் மூன்று முறை அவரை மறுதலித்தான். எனவே **மூன்று முறை அவனிடம் பேதுருவே, நீ என்னை நேசிக்கிறாயா? என்று கேட்டார்** (யோவான் 21:15–17). ஒவ்வொருமுறையும் அவன், ஆம், ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்று பதில் சொன்ன போதிலும், இயேசு கிறிஸ்து இந்தக் கேள்வியை மூன்று முறைக் கேட்டதினால் அவன் துக்கமடைந்தான். அவன் அதற்கு முன்பு செய்த மறுதலிப்புகளை இப்படி செய்ததின்மூலம் இயேசு கிறிஸ்து ரத்து செய்தார் என்பதை அவன் உணரவில்லை. ஒவ்வொரு முறை அவன் கூறிய தவறான வார்த்தைகளுக்கும் சரியான பாவ அறிக்கையைச் செய்யும்படி அவர் செய்தார். இதனால் அவன் மறுபடியும் ஒரு சீஷனாக சேர்த்துக் கொள்ளப்பட்டான்.

இதுபோல் இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறையும்போது பிலாத்து இயேசு கிறிஸ்துவை விடுதலை செய்ய மனதாயிருந்தபோது, அக்காலத்து யூதர்கள், “**இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறையும், இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் வரட்டும்**” என்று கூச்சலிட்டார்கள். அவர்களுடைய வாயின் வார்த்தைகளாலே தங்களுக்கு சாபத்தைத் தருவித்துக் கொண்டார்கள். சரித்திரத்தைப் பார்க்கும்போது ஒரே தலைமுறையில் ரோம ராணுவம் எருசலேமை அழித்தது. இன்றைக்கும் அவர்களுக்குப் பாதுகாப்பு இருந்தாலும், பரதேசிகளாக உலகமெங்கும் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

## 3. ஜீவனுள்ள தேவனுக்கு ஈடாக விக்கிரகங்களை உருவாக்கி வணங்குதல் சாபத்தைக் கொண்டு வரும்!

யாத்திராகமம் 20:4, 5 வசனங்களில் **மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம், உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்** என்று வேதம் சொல்லுகிறது. 5 –ம் வசனத்தில் ஜீவனுள்ள தேவனுக்கு ஈடாக சொரூபத்தையாகிலும், விக்கிரகத்தையாகிலும் உண்டு பண்ணுகிறவர்களும் தேவனுக்குப் பகைஞர் என்று கூறப்பட்டுள்ளது. இவர்கள் ஜீவனுள்ள தேவனை ஊரும் பிராணிகளான பாம்பு, குரங்கு, யானை மட்டுமன்றி அருவருப்பான உருவங்களுக்கு ஈடாகக் கருதுகிறவர்கள். இப்படி சிலர் சகல அதிகாரமும் படைத்த ஜீவனுள்ள தேவாதி தேவன், இராஜாதி ராஜன், மகா தேவனை அவமானப்படுத்துகிறவர்களாக இருப்பதாலும், சர்வ வியாபியாகிய அவரை அழிந்துபோகிற

சிற்பங்களுக்கும், உருவங்களுக்கும் ஈடாக்கி அவருக்கு எரிச்சலூட்டுவதாலும், **அவர்களையும், அவர்களுடைய சந்ததியையும் மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும் விசாரிப்பேன்** (எண்ணாகமம் 14:17) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

உதாரணமாக, ஓர் தலைவருடைய பிறந்த நாளன்று அவரை கனப்படுத்தும் விதத்தில் மாலையணிவிக்கும்போது, உண்மையான அவருடைய உருவப் படத்திற்கு மாலையணிவிக்காமல், ஒரு குரங்கின் படத்தை வைத்து அதற்கு மாலையணிவித்து அதனை கனப்படுத்தினால், சம்பந்தப்பட்ட நபரை கனவீனம் பண்ணுவதாக இருக்காதா? சிந்தித்துப் பாருங்கள். எனவேதான், விக்கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள் என்று வேதம் சொல்லுகிறது. ... **எனக்குப் பிரியமானவர்களே, விக்கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள்.** 1 கொரிந்தியர் 10:14. இதனால் தான் பலருடைய வாழ்க்கையில் சாபம் மாறவில்லை. இதற்கு என்ன செய்ய வேண்டும்? நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

## 4. தகப்பனையும், தாயையும் கனம்பண்ணாவிட்டால் சாபம் வரும்!

யாத்திராகமம் 20:12 –ல் ... **உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும், உன் தாயையும் கனம்பண்ணு**வாயாக என்று வேதம் கூறுகிறது. மாற்றிப்படித்தால், உன் தகப்பனையும், உன் தாயையும் கனம்பண்ணாவிட்டால், உனக்கு வாழ்நாள் குறைவு என்று அர்த்தம். நீண்ட ஆயுள் என்று சொல்லும்போது, போதுமான பொருளாதாரம், நல்ல சரீர சுகம், நல்ல குடும்பம், மன நிம்மதி இவை எல்லாம் உள்ளடங்கும். இவையெல்லாம் இருந்தால்தான் நீண்ட காலம் வாழ முடியும்.

இன்றைய தலைமுறையில் உள்ளப் பலருக்கு இப்பேர்ப்பட்ட ஆசீர்வாதங்கள் இல்லை. ஏனென்றால் அவர்கள் தங்கள் பெற்றோருக்கு சரியான சாப்பாடு கொடுப்பதில்லை. பெற்றோர் தங்களுக்குப் பாரமாயிருக்கிறார்கள் என்று அவர்களை முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட்டு, பிள்ளைகள் மாத்திரம் நல்ல வசதியான வீடுகளில் வாழுகிறார்கள். பெற்றோர் ஒருவேளை உங்கள் ஆவிக்குரிய கிறிஸ்தவ வாழ்க்கைக்கு தடை உண்டுபண்ணுகிறவர்களாவோ, எதிர்க்கிறவர்களாகவோ, வயதானவர்களாகவோ, கல்வியறிவில்லாதவர்களாகவோ, உங்களை சரியாகப் புரிந்துகொள்ளாமல் உங்களுக்கு விரோதமாகப் பேசுகிறவர்களாகவோ இருந்தாலும் பிள்ளைகள் எவ்வித நிபந்தனையுமின்றி அவர்களைக் கனம்பண்ணி, அவர்களை கவனித்துத்தான் ஆக வேண்டும். இல்லாவிட்டால் ஆசீர்வதிக்கப்பட முடியாது! ஒருபோதும் முடியாது!!

## 5. தேவனுடைய சபைக்குத் தீங்கு செய்தால் சாபம் வரும்:

**ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்...** 1 கொரிந்தியர் 3:17. **நீங்களும் யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள்.** 1 கொரிந்தியர் 10:33. தேவனுடைய சபையைக்குறித்த உபதேசம் மிக கருத்தாழம் நிறைந்தது. எனவேதான் சபையைக் குறித்து **இந்த இரகசியம் பெரியது** ... எபேசியர் 5:32 என்றும் **தாம் அதைத் (சபையை) திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திகொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.** எபேசியர் 5:26,27 என்றும், **நான் ... என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.** (I will build My Church) மத்தேயு 16:18 என்று இயேசு கிறிஸ்துதாமே தம் சொந்த வாயினால்


## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

**இந்திய மாணாக்கர்களுக்கு மட்டும்**

### I. வேதாகமத் தபால் கல்வி

**தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.**

**"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.**

### II. அஞ்சல் வழி இறையியல் கல்வி

**ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம் ரூ.1000/– மட்டுமே.**

**மேலும் விவரங்களுக்கு :**

**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in



## அழைப்பின்எதிரொலி
### பத்திரிகையை

**இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல் வாய்ப்பு**

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!


## வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**Account Name** : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST
**Account Number** : 1023 2923 805
**Bank Name** : STATE BANK OF INDIA
**Branch** : TRIPLICANE, CHENNAI - 600 005
**IFSC Code** : SBIN 0000249
**SWIFT Code** : SBI NIN BB 455



# குழிக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## அற்புதங்களை நடப்பித்த தேவன்!

ஒருமுறை நான் தென் இந்தியாவில் உள்ள உதக மண்டலத்தில் சுவிசேஷ வேலைக்குச் சென்றிருந்தபோது, கடைசி நாள் கூட்டத்திற்கு நான் ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளையில், வேலூர் என்ற ஊரில் உள்ள என் நண்பரின் மனைவி சகோதரி தெபோரா என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு "சகோதரனே, என் கணவர் திரு. சாமுவேல் ஜெயசீலன் இருதய வேதனையால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். அவருக்கு ஏற்கனவே ஒரு இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அடுத்து இன்னொரு அறுவை சிகிச்சை செய்ய அவருடைய சரீரத்தில் பெலனில்லை; உடனேப் புறப்பட்டு வாருங்கள்" என்று கூறி அழுதார்கள்.

அன்று இரவு நான் அவசரமாகப் புறப்பட்டு மறுநாள் காலையில் அவரை மருத்துவமனைப் படுக்கையில் சந்தித்தேன். அடுத்த அறுவை சிகிச்சைக்கென அவரை தயார்ப்படுத்தி, தியேட்டருக்கு அழைத்துச் செல்லும் நேரமாக அந்த நேரம் இருந்தது. நான் மிகவும் கலக்கமடைந்து அவருடைய தலையில் கைவைத்து, "ஆண்டவரே, என் சகோதரருக்கு இந்தமுறை அறுவை சிகிச்சை வேண்டாம். அற்புத சுகம் தாரும்" என்று ஜெபித்தேன். அங்கிருந்த மருத்துவர்கள் என்னைப் பார்த்து ஏளனமாக சிரித்துப் பரிகாசமாகப் பேசினார்கள்.

பிறகு அறுவை சிகிச்சை தியேட்டருக்குள் போகும்வரை நான் ஜெபத்துடன் சென்றேன். குடும்பத்தினர் நம்பிக்கை இழந்து விட்டனர்.

நான் உறுதியாய் ஆண்டவரிடம், தியேட்டர் வாசல் அருகே நின்று ஜெபித்துக் கொண்டேயிருந்தேன்.

சுமார் ஒரு மணிநேரம் பொறுத்து வந்த மருத்துவரிடம் "என் சகோதரன் எப்படியிருக்கிறார் ?" என்று கேட்டேன். அப்போது அவர், "இப்போது அறுவை சிகிச்சை தேவை இல்லை. ஒரு சிறு வால்வு மட்டும் சற்று பெலவீனமாக இருக்கிறது. அதை மாத்திரை கொடுத்து சரிப்படுத்தி விடலாம்" என புன்முறுவலுடன் சொன்னார்.

நான் ஆண்டவரிடம் ஜெபித்த என் விண்ணப்பத்தை ஆண்டவர் தயவாய் அங்கீகரித்து அந்த சகோதரனுக்கு நல்ல சுகத்தைக் கொடுத்தார்.

ஆண்டவருக்கே மகிமை! இதே அற்புதங்களை நம் ஆண்டவர் தொடர்ந்து செய்கிறார்.

*******

சொன்னார் என்றும் வேதம் மிகத் தெளிவாகக் கூறுகிறது. இதிலிருந்து தேவனாகிய கர்த்தர் தமது சபையை எவ்வளவு அதிகமாய் நேசிக்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மட்டுமின்றி, தேவன் தமது சொந்த இரத்தத்தை விலைக்கிரயமாகக் கொடுத்துதான் சபைகளை உருவாக்கியிருக்கிறார். இப்படியிருக்க தேவனுடைய சபையைக் கெடுக்க யாராவது முன்வந்தால் அவர்களைத் தண்டியாமல் விடவேமாட்டார் என்பது தெளிவான உண்மை. ஆகவே தான் **ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார் ...** என்று வேதம் கூறுகிறது. 1 கொரிந்தியர் 3:17.

இப்படியிருக்க சிலர் தேவனுடைய சபையைக் குறித்து விரோதமாகத் தாறுமாறாகப் பேசுகிறார்கள். சிலர் தேவனுடைய சபையின் சொத்துக்களைத் திருடுகிறார்கள். சிலர் தேவனுடைய சபையின் உபதேசங்களைப் பற்றி தரக்குறைவாக நினைக்கிறது மட்டுமின்றி தேவையற்ற விமர்சனங்களையும் செய்கிறார்கள். சில தேவனுடைய பிள்ளைகள் கடுமையானப் பாடுகளை அனுபவித்து, சில ஆத்துமாக்களை சம்பாதித்து அவர்களுக்கு உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தால், அவர்களுடைய சபைகளுக்குள் சிலர் புகுந்து சில விசுவாசிகளைத் திருடிச்சென்று, **ஒரு புது சபையை உருவாக்குகிறோம் என்று ஊழியம் என்கிற பெயரில் அட்டூழியம் செய்கின்றனர்.** சிலர் தங்களை வளர்த்து ஆளாக்குகிற சபையைக் குறித்தும் போதகர்களைக் குறித்தும் தவறானக் கருத்துக்களை மக்களிடையே பிரச்சாரம் பண்ணி தங்களை வாழ்வித்துக் கொள்ள முயற்சிக்கின்றனர். அன்பானவர்களே, ... **தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார் ...** கலாத்தியர் 6:7 –ல் வேதம் சொல்லுகிறது. மட்டுமின்றி, நியாயத்தீர்ப்பு நாளிலே இவர்களைப் பார்த்து, ... **நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரம செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் ...** என்று மத்தேயு 7:23–ல் ஆண்டவராகியக் கர்த்தர் சொல்லிவிடுவார். இது எவ்வளவு கொடுமை என்று சிந்தித்துப் பாருங்கள்!

இப்படியாக தேவனுடைய சபைக்கும், அதனை பொறுப்பேற்று நடத்த தேவனால் நியமிக்கப்பட்ட அவருடைய ஊழியக்காரர்களுக்கும் எதிராக செயல்பட்ட யாரையும் அவர் தப்பவிடாமல் வாழ்நாள் முழுவதும் அவர்கள் மறக்காமல் இருக்கத் தக்கதாக அவர்கள் யாராக இருந்தாலும், அவர்களைத் தண்டித்து வருகிறார். சில சாபங்களும், அதன் தண்டனைகளும் அவர்களுடைய எதிர்கால சந்ததியையே சாபத்துக்குட்படுத்தி, அவர்களை சந்ததி சந்ததியாக தண்டனைக்குட்படுத்தியிருக்கிறார். இது சரித்திர மற்றும் வேதாகமச் சான்று.

### இதற்கு சில சான்றுகள்!

1. தேவ ஊழியக்காரரும், தீர்க்கதரிசியுமாயிருந்த எலிசாவின் வேலைக்காரனாகிய கேயாசி என்பவன் எலிசாவை அறியாமலும், அவருடைய உபதேசத்துக்கும், விருப்பத்துக்கும் எதிராகவும் செயல்பட்டு, குஷ்டரோக வியாதியிலிருந்து சுகமடைந்த நாகமானிடமிருந்து காணிக்கையையும், வெகுமதியையும், வாங்கிய ஒரே காரணத்தினால், **அவனும் அவனுடைய பின் சந்ததியாரும் குஷ்டரோக வியாதியினால் பிடிக்கப்பட்டதுமன்றி, அவன் தேவ சமூகத்தைவிட்டுத் தள்ளப்பட்டான்**

(2 இராஜாக்கள் 5:27). இது எவ்வளவு கொடுமை என்று பாருங்கள்.

**2. தங்கள் சொந்த சொத்தைத் தாங்களாகவே விற்றுவிட்டு, காணிக்கைக் கொடுக்கிற விஷயத்தில் தேவ ஊழியக்காரராகியப் பேதுருவிடத்தில் பொய் சொன்ன அனனியா என்பவனும் அவனுடைய மனைவியாகிய சப்பீராளும் அகால மரணங்களை சந்தித்தனர்.** (அப்போஸ்தலர் 5:1 முதல் 10 வரை).

இப்படியாக, தேவனுடைய சபையையும், அவருடைய ஊழியர்களையும் அவமதித்தவர்களையும், அவர்களுக்குத் துரோகம்பண்ணினவர்களையும், அவர்களுக்குத் தீமை செய்த தனி நபர்களையும், அரசாங்கங்களையும், சாம்ராஜ்யங்களையும் தேவன் அழித்து சுக்குநூறாக்கி நாசம்பண்ணியிருக்கிறார். அவரால் அழைக்கப்பட்டு, அவருக்காக உழைக்கிற, அவருடைய மந்தையை மேய்க்கிற ஊழியக்காரர்களை வேதனைப்படுத்துகிறவர்களை தேவன் கண்டிப்பாகத் தண்டிப்பார்.

**"அழைப்பின் எதிரொலி"** ஊழியப் பயணத்தில் நான் இந்தக் காரியங்களைக் கண்கூடாகப் பார்க்கிறேன். என் எளிமையான ஆரம்பநாட்களில், என் ஊழியங்களை அழிக்கவேண்டும் என்ற எண்ணத்தாலும், என்னைத் துன்பப்படுத்தினால் தட்டிக்கேட்க யாரும் இல்லை என்ற எண்ணத்தாலும், சிலர் நான் வேலை செய்துவந்த அரசாங்க அலுவலகத்திற்குள் புகுந்து, என்னுடைய உயர் அதிகாரிகளையும் எனது உடன் பணியாளர்களையும் எனது கண் எதிரிலேயே நேரில் சந்தித்து, தங்கள் விரல்களை எனக்கு நேராக நீட்டி என்னைக் குறித்தும், என் ஊழியங்களைக் குறித்தும் அவதூறாகப் பேசி என் மனதை புண்படுத்தினர். ஆண்டவர் அவர்களையும் அவர்கள் குடும்பத்தையும் நாசம் பண்ணியதும் அல்லாமல், அவர்களுடைய சந்ததியையே சீரழித்துப்போட்டார். சிலர் பைத்தியக்காரர்களாக தெருக்களில் அலைகிறார்கள். சிலர் ஆதரவற்று அலைகிறார்கள். அவர்களுடைய சந்ததிகள் பிரயோஜனமற்றவையாக மாறிவிட்டன.

சமீபகாலத்தில்கூட இதைவிட மேலான காரியங்கள் நடந்துள்ளன. நாம் இப்போது ஊழியம் செய்கிற தலைமைச் சபை இருக்கிற இடத்தின் சுற்றுவட்டாரத்தில் இருந்த பலர் எனக்குப் பல்வேறு விதங்களில் நெருக்கடிகளையும், மன உளைச்சல்களையும் கொடுத்து, பலமுறை சரீரபிரகாரமாக என்னை உதைக்கவும் ஓடி வந்தனர். நமது ஆலயத்திற்குமுன் வாசலில்கூட நமது ஊழிய வாகனத்தை நிறுத்தவிடாமல் தடுத்து, எனக்கு உதவிசெய்ய யாரும் இல்லை என்று நினைத்து என்னை கடுமையான கஷ்டத்திற்குள்ளாக்கினர். காலம் கடந்தது. அந்த நபர்களில் சிலருக்குத் தீராத வியாதிகள் வந்ததால், செயலிழந்து மரித்துவிட்டார்கள். சிலருடைய குடும்பங்களில் ஏற்பட்ட ஓயாத சண்டைகளால் தங்கள் வீடுகளை விட்டுவிட்டு, வேறு இடங்களுக்கு ஓடிவிட்டார்கள், இன்னும் சிலருக்கு சமாளிக்க முடியாத வேதனைகளும், உபத்திரவங்களும் வந்து அவை அவர்களை மேற்கொண்டதால், அதிக விலைபெறுமதியான சொத்துக்களைக் குறைந்த விலைக்கு விற்றுவிட்டு, இந்த இடத்தைவிட்டு ஓடிப்போனால் போதும் என்ற நிலைக்கு வந்து, பெரிய கூட்டுக் குடும்பங்கள் சின்னாபின்னமாக உடைந்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூலைக்கு ஓடிவிட்டார்கள். **இப்போது நம்முடைய ஊழியங்களுக்கு எதிர்த்து நிற்பார் யாருமில்லை, இதைச் செய்தது யார் ? இதற்கு காரணம் என்ன ? சிந்தித்துப் பாருங்கள் !**

## 7 சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்குக் கடந்து வர ஏழு கட்டளைகள்!

1. இயேசு கிறிஸ்துவின் மேலும் அவர் உங்களுக்காகச் செய்த தியாகத்தின் மேலும் நீங்கள் வைத்துள்ள விசுவாசத்தை உங்கள் வாயினால் அறிக்கை செய்யுங்கள்.
2. உங்களுடைய முரட்டாட்டமான பாவ வாழ்க்கையிலிருந்து மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்.
3. உங்களுக்குத் தீங்கு செய்தவர்களை மன்னியுங்கள்.
4. சாத்தான் மற்றும் விக்கிரக வழிபாடுகள் சம்பந்தமான காரியங்களுடன் உள்ள ஈடுபாடுகளிலிருந்து முற்றிலுமாக வெளியே வாருங்கள்.
5. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்களை மன்னிக்க விரும்புகிறார் என்பதை விசுவாசித்து அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்டு அவருடன் முழுமையாய் சார்ந்து கொள்ளுங்கள். பாவ மன்னிப்பையும் விடுதலையையும் விசுவாசத்தால் பெற்றுக் கொள்ளுங்கள்.
6. உங்களது அருகாமையில் உள்ள ஆவிக்குரிய சபைக்குச் சென்று அங்குள்ளப் போதகரை சந்தித்து, மனம் திறந்து அவருடன் பேசி, அவருடன் ஒட்டிக் கொள்ளுங்கள்.
7. சாத்தான் வெட்கப்படும் படியாக ஜெபத்துடனும், வேதவாசிப்புடனும் இயேசு கிறிஸ்துவுக்கு ஏதாவது ஒரு வழியில் ஊழியம் செய்யுங்கள்.

உங்களுக்கு வெற்றி நிச்சயம்!

*******


We're HIRING

Qualified, Expeienced & Mission Minded Candidates for

Medavakkam ST. PAUL'S MATRICULATION SCHOOL :

❖ PRINCIPAL
❖ TEACHERS (Social Science, KG etc.,)

for Head Office @ CHEPAUK :

❖ DTP OPERATORS
❖ COMPUTER OPERATORS (with Typing)
❖ DRIVERS

E.mail : samselvaraj333@gmail.com
97908 05460 / 044- 2852 8282


## அன்பான வாசகர்களின் கவனத்திற்கு . . .

### போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் சுயசரிதை

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் சுயசரிதையை புத்தக வடிவில் முடிப்பதற்கான நிறைவுக் கட்டத்தில் இருக்கிறோம். **நமது போதகரின் ஊழியத்தின் மூலம் நீங்கள் பெற்ற நன்மைகளை 10 வரிகளில் சாட்சியாக எழுதி அனுப்பவும்.** கூடுதலாக தங்கள் புகைப்படத்தை அனுப்பினால் அதனை சுயசரிதை புத்தகத்தில் சேர்த்து வெளியிட உதவியாக இருக்கும்.

– ஆசிரியர்

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## அழைப்பின் எதிரொலி

### YouTube (யூடியூப்)

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப் (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **S. Sam Selva Raj** |
| A/C No. | : | **1023 2934 679** |
| IFSC | : | **SBIN 00 00 249** |
| SWIFT CODE | : | **SBI NIN BB 455** |

### *2. Bank : ICICI Bank*

| | | |
|---|---|---|
| Branch | : | **Anna Salai, Chennai-6** |
| Name | : | **Echo of His Call** |
| A/C No. | : | **6038 0502 2319** |
| IFSC | : | **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : | **1023 2923 805** |
| IFSC | : | **SBIN 00 00 249** |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**

*****

E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**❊ வருட சந்தா ரூ. 100/– ❊ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th AUGUST 2024**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

*JESUS LOVES YOU!*

**To**

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**